

வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் சி.ரவி தலைமையில் நடந்தது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, பொருளாளர் சி.நரசிம்மன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி.தயாநிதி, ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர் கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விருதுநகர் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

*விருதுநகர், செப்.12-*

விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு வருமாறு:-



விருதுநகர் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை 13.09.2024-வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில், மல்லாங்கிணறு, இராஜா மணி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினார்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் / நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் / துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கிளைக்கழகச் செயலாளர்கள் / பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளட்ட கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நாடாளுமன்றத் தேர்தலில் 40/40 வெற்றிக்காக நன்றி தெரிவித்தல். செப்டம்பர் 15-ஆம் தேதி நடைபெறவுள்ள தி.மு.க. முப்பெரும் விழா சம்மந்தமாக. வருகின்ற 2026-ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான இடங்களில் தி.மு.கழகம் வெற்றி பெற்றிட. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

---

### திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டம் முழுவதும்

# கழகத்தினர் வீதிகள் - வீடுகள் தோறும்கழகக் கொடியினை ஏற்றுவீர்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை!

*திண்டுக்கல், செப்.12-*

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அர. சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர். ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





கழக பவளவிழாவினையொட்டி திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள கழகக் கொடிக்கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதிகளில் கழகத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த கழக மூத்த முன்னோடிகளின் கரங்களால் இருவண்ணக் கொடியினை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திடவேண்டும். வீதிகள் தோறும் பறக்கும் இருவண்ணக்கொடி நம் வீடுகள் தோறும் பறந்திட வேண்டும். கழகக்கொடி பறக்காத கழகத்தினரின் வீடுகளே இல்லை என்னும் வகையில் பவளவிழாவினை முன்னிட்டு நம் அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள், வணிக வளாகங்களில் கழகக்கொடி ஏற்றிக் கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

---

# மதுரை வடக்கு, தெற்கு மாவட்டத்தில் வீதிகள் - வீடுகள் தோறும் கழக கொடி ஏற்றுவீர்

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை

*மதுரை, செப்.12-*

மதுரை வடக்கு, தெற்கு மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி. மூர்த்தி, சேடப்பட்டி மு.மணி மாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதன் விபரம்,





பேரறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பல்லாண்டு காலம் கழகத்தை தொடர்ந்து வழி நடத்தி தற்போது தலைவர் கலைஞர் வழியில் கழகத்தை நடத்திவரும் நம் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத்தின் பவள விழா மற்றும் முப்பெரும் விழாவை முன்னிட்டு நகரம் மற்றும் கிராமங்கள் தோறும் வீதிகள், கழகத்தினர் இல்லங்கள் தோறும் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி சிறப்புடன் கொண்டாட வேண்டும். மேலும் வணிக வளாகங்கள், அலுவலங்களிலும் இருவண்ண கொடியேற்றி சிறப்பிக்க வேண்டும். இது ஒரு திருவிழா போல் மக்கள் மத்தியில் எழுச்சியுடன் காண வேண்டும் என்று அறிவித்தார்கள். தலைவர் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு மாவட்டம் முழுவதும் கழகத்தினர் நகர மற்றும் கிராம பகுதியில் உள்ள வீதிகள், வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள், அலுவலகங்களில் கழகத்தின் இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி சிறப்புடன் கொண்டாட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

---

### நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும்

# கழகத்தினர் இல்லங்களில் கழகக் கொடி ஏற்றுவோம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை

*நெல்லை, செப்.12-*

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் வருமாறு:



“திராவிட மாடல்”முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின் படி தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக் காக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம்,75 ஆண்டுகளாக மக்களுக்கு பணியாற்றி, இந்த 2024 ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினை கொண்டாடுகிறது.

பவள விழாவையொட்டி முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுடைய அறிவுறுத்தல்படி நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர, பேரூர்,கிளை,வார்டு,பகுதிகள் அனைத்திலும் கழகக் கொடிக்கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு அதில் அந்தந்த பகுதியில் கழகத்திற்காக அல்லும்,பகலும் உழைத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்றி பட்டொளி வீசிப் பறந்திட செய்திட வேண்டும்.

கழகக் கொடி பறக்காத கழகத்தினர் வீடுகளே இல்லை என்னும் வகையில் பவள விழாவை முன்னிட்டு நம் அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள்,வணிக வளாகங்களில் கழகக் கொடியேற்றி மிகச் சிறப்பாக கொண்டாடுவோம் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக திருமங்கலத்தில் நடைபெற்ற கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், நகரச் செயலாளர் ஸ்ரீதர் தலைமையில், கழக நிர்வாகிகள் நாகராஜன், லதா அதியமான், கே.ஆர்.சாமிநாதன், ரம்யா முத்துக்குமார், முத்துக்குமார், ஆதவன், ஏ.சி.செல்வம், அப்துல்கலாம் ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் மைதீன் பிச்சை, ஜாகிர் உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், திரளான கழகத்தினர், பொது உறுப்பினர்கள் உள்ளனர்.


